தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, தை 21, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 பிப்ரவரி 3, புதன்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.”

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. வீ. சந்திரன் அவர்கள் 17–9–2020 அன்றும், திரு. சு. சிவராஜ் அவர்கள் 20–9–2020 அன்றும், திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 21–9–2020 அன்றும், திரு. ஜி.பி. வெங்கிடு அவர்கள் 23–9–2020 அன்றும், திரு. இரா. அரிக்குமார் அவர்கள் 26–9–2020 அன்றும், திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் 9–10–2020 அன்றும், திரு. பா. மனோகரன் அவர்கள் 13–10–2020 அன்றும், திரு. P. வெற்றிவேல் அவர்கள் 15–10–2020 அன்றும், திரு. லி. அய்யலுசாமி அவர்கள் 23–10–2020 அன்றும், திரு. பி. முகமது இஸ்மாயில் அவர்கள் 17–11–2020 அன்றும், திரு. வி. தண்டாயுதபாணி அவர்கள் 21–11–2020 அன்றும், திரு. எஸ். அக்னி ராஜூ அவர்கள் 22–11–2020 அன்றும், திரு. சொ.ந. பழனிசாமி அவர்கள் 28–11–2020 அன்றும், திருமதி வி. சிவகாமி அவர்கள் 29–11–2020*

[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 3

அன்றும், திரு. ஏ.டி. செல்லச்சாமி அவர்கள் 7–12–2020 அன்றும், திரு. எஸ்.ஆர். இராதா அவர்கள் 8–12–2020 அன்றும், திரு. எஸ். மணி அவர்கள் 22–12–2020 அன்றும், திரு. கே.ஏ. மணி அவர்கள் 26–12–2020 அன்றும், திருமதி டி. யசோதா அவர்கள் 27–12–2020 அன்றும், திரு. ப.வெ. தாமோதிரன் அவர்கள் 12–1–2021 அன்றும், திரு. இரா. சண்முகம் அவர்கள் 16–1–2021 அன்றும் மற்றும் திரு. மு. பழனிவேலன் அவர்கள் 27–1–2021 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. சந்திரன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் சிவகங்கை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சு. சிவராஜ் அவர்கள் 1985–1988, 1996–2001, 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் ரிஷிவந்தியம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 1971–1976, 1977–1980 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் வேதாரண்யம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. ஜி.பி. வெங்கிடு அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. இரா. அரிக்குமார் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

2021 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

திரு. பா. மனோகரன் அவர்கள் *1989–1991* ஆம் ஆண்டுகளில் சிவகங்கை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. P. வெற்றிவேல் அவர்கள் *2011–2015* ஆம் ஆண்டுகளில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலிருந்தும் மற்றும் *2016–2017* ஆம் ஆண்டுகளில் பெரம்பூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. லி. அய்யலுசாமி அவர்கள் *1996–2001* ஆம் ஆண்டுகளில் கோவில்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. பி. முகமது இஸ்மாயில் அவர்கள் *1980–1984* ஆம் ஆண்டுகளில் பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி அவர்கள் *1991–1996* ஆம் ஆண்டுகளில் குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், *1977–1979* ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். அக்னி ராஜூ அவர்கள் *1967–1971* ஆம் ஆண்டுகளில் திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சொ.ந. பழனிசாமி அவர்கள் *1977–1980* ஆம் ஆண்டுகளில் அவினாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திருமதி வி. சிவகாமி அவர்கள் *2001–2006* ஆம் ஆண்டுகளில் தாராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. ஏ.டி. செல்லச்சாமி அவர்கள் *1991–1996* ஆம் ஆண்டுகளில் ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 3

திரு. எஸ்.ஆர். இராதா அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் கும்பகோணம் தொகுதியிலிருந்தும் மற்றும் 1989–1991 ஆம் ஆண்டுகளில் மதுரை கிழக்கு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1980–1986 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1983–1985 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் மற்றும் 1989–1991 ஆம் ஆண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். மணி அவர்கள் 1962–1967 ஆம் ஆண்டுகளில் வெங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே.ஏ. மணி அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் கபிலமலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திருமதி டி. யசோதா அவர்கள் 1980–1984, 1985–1988, 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ப.வெ. தாமோதிரன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் பொங்கலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 2002–2006 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. இரா. சண்முகம் அவர்கள் 1977–1980, 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் திருத்தணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க முறையில் பணியாற்றினார்கள்.

திரு. மு. பழனிவேலன் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் நாமக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும்,

2021 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற மக்கள் பணியாற்றியவரும், 2016 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைத் துறை அமைச்சராக திறம்படப் பணியாற்றியவருமான திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் 31–10–2020 அன்று உடல்நலக்குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

முற்பகல் 10–10

விவசாயக் குடும்பத்தில் பிறந்த திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், எளிமையும், இனிய பண்பும் தன்னகத்தே கொண்டவர். கட்சிப் பாகுபாடின்றி பழகி, அனைவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பிரபல பாடகர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேனினும் இனிமையான குரலால் அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்தவரும், பிரபல திரைப்படப் பாடகரும், நடிகரும், 'எஸ்.பி.பி.' என்று*